முருகப்பெருமான் துணை

**மகான் கவுபாலச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.10.2022, செவ்வாய்கிழமை

1. யோகராஜனே அரங்கா வாழ்க
உயிர்கொலை நீக்கி மக்கள்வாழ
வாகுடனே அருளும் ஞானியே
வள்ளலே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
ஆசிதனை சுபகிருது துலை திங்கள்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் முதல் நாள் 18.10.2022, செவ்வாய்கிழமை)
அறிவிப்பேன் ஏகதிகதி குசன் வாரம்
3. வாரமதில் கவுபாலச்சித்தர் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
பாரதனில் அரங்கன் ஞானம்
பலமாக தழைத்து ஓங்கி வர
4. வருகவே அரங்க மகானை
வணங்கி உலக மக்கள் வர
முருகப் பெருமான் வழிபாடெனும்
முழுமைதரும் சரவணச் சுடரேற்றி
5. ஏற்றியே நித்திய பூசையாக
இடைவிடா தொடர்ந்து செய்து
உற்றதொரு தருமம் தன்னை
உயர்வாக உலகமக்கள் செய்துவர
6. வருகவே தருமபலம் கூடியே
வந்தடையும் உலகோர்க்கு திடம்
பெருமை மிக்க ஞான வழிகளாம்
பிரணவக் குடிலின் கொள்கைகளை
7. கொள்கைகளை ஏற்று நன்கு
குருவேயென சரணாகதி தன்னை
ஆள்பவர்கள் அதிகாரிகள் என
அனைவரும் ஏற்று நடந்திட
8. நடந்திட இடர்கள் விலகும்
ஞான வழிகளாக பிறக்கும்
இடரின்றி எல்லா வகையிலும்
ஏற்றமும் நல்ல மாற்றமும் காணும்
9. காணவே தெய்வ அனுகூலமாகி
கண்டுரைப்பேன் சர்வபலமாக
ஞானவான்கள் படைகளாக மாறி
ஞானிகள் ஆட்சி உருவாகும்

10. ஆகுமே தருமவான் எனும்
ஆற்றலும் அதிபலமும் கூடி
செகமெங்கும் மக்களை காக்கும்
சிறப்பான ஞானிகள் ஆட்சியாக

11. ஆகவே மாற்றம் கண்டுமே
அகிலம் அரங்கன் ஆசிபட
மிகையான ஞான ஆட்சி பெறும்
மொழிந்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–